

# உங்கள் போதகருக்கு உதவுவது எப்படி

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.

தற்போதைய பதிப்பு: 2024

**தகவல் தொடர்புக்கு**

All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

**தொலைபேசி:** +91-80-25452617
**மின்னஞ்சல்: bookrequest@apcwo.org**
**இணையதளம்: apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**
ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்” என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**
**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil — How to Help Your Pastor)



# உங்கள் போதகருக்கு
# உதவுவது எப்படி

# பொருளடக்கம்

அறிமுகம்

1. போதகர் மற்றும் திருச்சபை ஊழியர்களின் நோக்கங்கள் 1

2. உங்கள் போதகருக்கு உதவுவது எப்படி 6

3. உங்கள் போதகர் ஒரு மனுஷன்தான் 25

# அறிமுகம்

திருச்சபையில் உள்ள ஜனங்களை சத்துவமுள்ளவர்களாய் உருவாக்குவதன் மூலம் அதை பலமான திருச்சபையாக உருவாக்க வேண்டும் என்ற ஆசையில், “உங்கள் போதகருக்கு உதவுவது எப்படி” என்ற இந்தச் செய்தியை நான் உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். அப்படிச் செய்வதால் என் இருதயத்தின் உந்துதலை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள செய்தி தனிப்பட்ட விதத்தில் யாருக்கும் எதிரானது அல்ல. நான் யாரிடமாவது தனிப்பட்ட முறையில் ஒரு காரியத்தைத் தெளிவுபடுத்த விரும்பினால், புத்தகத்தின் மூலமாக அல்லாமல் நேரடியாகவே அதைச் செய்வேன்.

குழந்தைகளை வளர்க்கும்போது, நாம் பெரும்பாலும் அவர்கள் மீது அன்பைப் பொழிந்தாலும், சில சமயங்களில் அவர்களிடம் கடினமாய் நடந்துகொள்வது பெற்றோர்களாகிய நமக்குத் தெரியும்! இது நம் குழந்தைகளை நாம் வெறுக்கிறோம் என்பதால் அல்ல, மாறாக அவர்களை சத்துவமுள்ளவர்களாக வளர்க்க வேண்டும் என்று நாம் விரும்புவதால்தான் அப்படிச் செய்கிறோம். அவ்வாறே, திருச்சபையில் சத்துவமுள்ளவர்களை வளர்க்க விரும்பும்போது, அவர்கள் தேவனுடைய வீட்டில் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

**1 தீமோத்தேயு 3:15**

**தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.**

உள்ளூர் திருச்சபையில் ஒருவரை நடத்துவதற்கு ஒரு முறையான வழி இருக்கிறது என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தேவனுடைய வீட்டில் நடந்துகொள்வதற்கான முறையான வழி இருப்பதாகவும், விசுவாசிகளுக்கு அதைக் கற்பிக்க வேண்டும் என்றும் பவுல் கூறுகிறார். துரதிர்ஷ்டவசமாக, இந்தக் காரியத்தைக் குறித்த போதனைகள் அதிகம் இல்லை, மேலும் எல்லோரும் தாங்கள் சரி என்று நினைப்பதைச் செய்ய முனைகிறார்கள். திருச்சபையில் உள்ளவர்கள் தங்கள் மனதில் தோன்றினதைச் செய்து, திருச்சபையை வெவ்வேறு திசைகளில் இழுக்கிறார்கள், இதனால், திருச்சபை ஒன்றுமில்லாமல் போகிறது! ஒவ்வொருவரும் தனக்குச் சரியென்று நினைப்பதைச் செய்தால், நம் மத்தியில் கூச்சல்களும் குழப்பமும் மட்டுமே நிறைந்திருக்கும். ஆனால் தேவன் குழப்பத்திற்கான ஆக்கியோன் அல்ல.

**1 கொரிந்தியர் 1:10**

**சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.**

இந்த வேத வாக்கியத்தில் ஒரு வேண்டுகோளோ அல்லது பரிந்துரையோ சொல்லப்படவில்லை, மாறாக தேவனுடைய அதிகாரத்தோடு கூடிய ஒரு வேண்டுகோளாக அல்லது கட்டாயமாகச் செய்ய வேண்டிய செயலாக சொல்லப்பட்டுள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் உள்ளூர் திருச்சபைக்கு கர்த்தர் இதைத்தான் கட்டளையிடுகிறார்.

- நீங்கள் அனைவரும் ஒரே காரியத்தைப் பேசுவீர்களாக. (இது சாத்தியமற்றதுபோல் தோன்றலாம்.)
- உங்களுக்கிடையில் பிரிவினைகள் (பிளவுகள் அல்லது

இடைவெளிகள்) இருக்க வேண்டாம்.

- நீங்கள் முற்றிலும் ஒன்றாக இணைந்திருப்பீர்களாக (ஒருமித்த உடன்பாட்டுடன்).
- நீங்கள் அனைவரும் ஒரே மனதுடனும் புரிதலுடனும் இருப்பீர்களாக.
- நீங்கள் அனைவரும் ஒரே உறுதி, நோக்கம் மற்றும் கருத்துடன் இருப்பீர்களாக.

கொரிந்து திருச்சபை பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, அது இன்றைய நமது திருச்சபைகளைப் போலவே ஒரு “சாதாரண” திருச்சபையாக இருந்ததைக் காண்கிறோம். அநேகக் காரியங்கள் தவறாக இருந்தன. சிலர் தாங்கள் அப்பொல்லோவைச் சேர்ந்தவர்கள் என்றும் வேறு சிலர் தாங்கள் பவுலைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறினர். திருமணம், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவுகள், அந்நியபாஷைகளில் பேசுதல், ஆவியின் வரங்கள் மற்றும் பல உபதேசங்கள் பற்றி பல்வேறு கருத்துக்கள் இருந்தன. ஒரு சிறிய ரொட்டித் துண்டு அல்லது ஒரு சிறிய கோப்பை திராட்சரசத்தோடு நிறுத்திவிடாமல், முழு ரொட்டியையும் ஒரு மிகப்பெரிய குவளை திராட்சரசத்தையும் விரும்பி, அவர்கள் கர்த்தருடைய பந்தியில் தங்கள் காலை உணவை உட்கொண்டது மிகப்பெரிய குற்றமாக இருந்தது! அவர்களின் நடத்தையின் நிமித்தம் பவுல் அவர்களுக்கு அறிவுரை கூறவும், அவர்களை நடத்துவதற்கான சரியான வழியை அவர்களுக்கு அறிவுறுத்தவும் வேண்டியிருந்தது (1 கொரிந்தியர் 11:17-33). இவ்வாறு, பலதரப்பட்ட பின்புலங்களைக்கொண்ட ஜனங்களுக்கு, ஒரே விஷயத்தைப் பேசவும், தங்களுக்குள் எந்தப் பிரிவினைகளும் இல்லாமல், பரிபூரணமாக ஒன்றாக இணைந்திருக்கவும், ஒருமனம், ஒரே புரிதல், ஒரே கருத்து மற்றும் ஒரே தீர்மானம் கொண்டவர்களாக இருக்கவும் வேண்டும் என்று பவுல் அறிவுறுத்துகிறார்.

கர்த்தர் ஒரு காரியத்தைச் செய்யும்படி நமக்குக் கட்டளையிட்டால், அதை நம்மால் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன், ஏனென்றால் நம்மால் செய்ய முடியாத ஒன்றைச் செய்யும்படி கர்த்தர் நமக்குக் கட்டளையிட மாட்டார். அப்படிச் செய்தால் அது சினத்தைத் தூண்டிவிடுதலுக்கு சமம். நாமும் கூட பவுல் குறிப்பிடும் திருச்சபை ஜனங்களாக இருக்க முடியும், ஒவ்வொரு போதகரும் தன்னுடைய சபை அப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆசிஷ் ராய்ச்சூர்

# 1

# போதகர் மற்றும் திருச்சபை ஊழியர்களின் நோக்கங்கள்

உங்கள் போதகருக்கு நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பதைப் பற்றி விவாதிப்பதற்கு முன், ஒரு போதகர் மற்றும் திருச்சபை ஊழியர்களின் நோக்கங்கள் என்ன என்பதை முதலில் நாம் புரிந்துகொள்வோம்.

**எரேமியா 3:15**

**உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்.**

தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்களாக, தேவ ஜனங்களுக்கு எழுதப்பட்ட தேவ வார்த்தையிலிருந்து, ஆவிக்குரிய அறிவு மற்றும் புரிதலோடு போதகர்கள் அவர்களைப் போஷிக்க வேண்டும், வேறு எந்த மூல ஆதாரத்திலிருந்தும் அல்ல. போதகர் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியிலிருந்து கிடைக்கப்பெற்ற ஒரு புரிதலை வழங்க வேண்டும்.

**எபேசியர் 4:11-13**

**11 மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும்,**
**12 பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,**
**13 அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.**

வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட இந்தப் பகுதி ஒரு போதகரின் ஊழியத்தையும் வார்த்தைக்கு ஊழியம் செய்வதில் ஈடுபட்டுள்ளவர்களையும் பற்றி விவரிக்கிறது. போதகர் என்பவர் ஊழியத்தின் வேலையைச் செய்ய நியமிக்கப்பட்டவர் அல்ல - நீங்கள் செய்ய வேண்டும்! நீங்கள்தான் ஒரு ஊழியர். திருச்சபையில் உங்கள் அருகில் அமர்ந்திருப்பவரும், உங்களுடன் இருப்பவரும்தான், ஊழியப் பணியைச் செய்யப்போகிறவர், மேய்ப்பரோ, போதகரோ, சுவிசேஷகரோ, தீர்க்கதரிசியோ, அப்போஸ்தலரோ அல்ல - ஐந்து வகையான ஊழியத்தின் பங்கு பரிசுத்தவான்களை ஊழியப் பணியைச் செய்யும்படி ஆயத்தப்படுத்துவதாகும். போதகரின் "பணி" உண்மையில் மிகவும் எளிதானது - அது உங்களை மேம்படுத்துவதற்காக மட்டுமே செய்யப்படுகிறது. பணியை நிறைவேற்றப்போகிறவர்கள் நீங்கள்தான்! நீங்கள் ஒரு திருச்சபை உறுப்பினராக மட்டும் இருப்பதில்லை, ஒரு ஊழியராகவும் இருக்கிறீர்கள். "திருச்சபை-உறுப்பினர் என்ற மனநிலையை" நீங்கள் கொண்டிருக்க முடியாது. நீங்கள் சர்வவல்லமையுள்ள தேவனுடைய ஊழியராக இருக்கிறீர்கள், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புவதற்காக, ஊழியத்தின் பணியைச் செய்ய உங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளவே, *"நாம் அனைவரும் ... விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,"* (எபேசியர் 4:13) நீங்கள் இங்கு இருக்கிறீர்கள். எனவே, போதகராகவும் திருச்சபை ஊழியர்களாகவும், கிறிஸ்துவினுடைய பூரண வளர்ச்சியை அடைய பரிசுத்தவான்களை ஆயத்தப்படுத்துவதே நமது பொறுப்பாகும். இதன் மூலம், பரிசுத்தவான்களால் ஊழியப் பணியைச் செய்ய முடியும். ஒவ்வொரு விசுவாசியும் அவருடைய ராஜ்யத்தில் ஒரு ஊழியக்காரராக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

**கொலோசெயர் 1:28**
**எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக** *(டெலியோஸ்)* **நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்.**

போதகர்கள் பிரசங்கிப்பதும் போதிப்பதும், மக்களை மகிழ்விப்பதற்காக அல்ல, மாறாக கிறிஸ்துவில் விசுவாசிகளை பரிபூரணமுள்ளவர்களாக்கி நிலைநிறுத்துவதற்காகவேயாகும். வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையான *'டெலியோஸ்'*—முற்றிலும் தேறின மனுஷன் என்ற பொருளைத் தருகிறது. ஒவ்வொரு விசுவாசியையும் முதிர்ச்சியடையும் இடத்திற்குக் கொண்டுவருவதே - கிறிஸ்துவில் முழுமையாக வளரச்செய்வதே எங்கள் குறிக்கோளாகும். நாங்கள் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளை வரவேற்கிறோம், ஆனால் அவர்கள் அப்படியே இருக்க வேண்டும் என்று விரும்புவதில்லை. கிறிஸ்துவில் ஒவ்வொரு நபரையும் முதிர்ச்சியடைந்தவர்களாக நிலைநிறுத்துவதே போதகரின் பொறுப்பாகும். நாம் அதைச் செய்யத் தவறினால், திருச்சபையில் போதகர்கள் மற்றும் தலைவர்கள் என்ற முறையில் நமது அழைப்பில் நாம் தவறியவர்களாக இருப்போம்.

## ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும் நிறைவேற்றப்பட வேண்டியவை

போதகர்கள் ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் நான்கு விஷயங்கள் நிறைவேறுவதைப் பார்க்க விரும்ப வேண்டும். அவர்கள் பின்வரும் காரியங்களில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தைக் காண விரும்ப வேண்டும்:

- **வார்த்தை:** போதகர்கள் திருச்சபையில் உள்ள ஒவ்வொரு நபரும் வார்த்தையில் பலமாக

வேரூன்றியிருப்பதைப் பார்க்க விரும்ப வேண்டும்.

- **ஆவி:** போதகர்கள் திருச்சபையில் உள்ள ஒவ்வொரு நபரும் ஆவியில் பலமாக வேரூன்றியிருப்பதைப் பார்க்க விரும்ப வேண்டும்.
- **கிறிஸ்துவைப் போன்ற குணாதிசயம்:** போதகர்கள் திருச்சபையில் உள்ள ஒவ்வொரு நபரும் கிறிஸ்துவைப் போன்ற குணாதிசயத்தில் வளர்ந்திருப்பதைப் பார்க்க விரும்ப வேண்டும்.
- **ஊழியம்:** போதகர்கள் ஒவ்வொரு நபரும் ஊழியத்திற்குத் தயாராக இருப்பதைப் பார்க்க விரும்ப வேண்டும்.

**கலாத்தியர் 1:10**

**இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே.**

போதகர்கள் மற்றும் தேவனுடைய ஊழியர்களாக, நாம் அழைக்கப்பட்டிருக்கும் தரத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். கலாத்தியர் 1:10ன் படி, மனுஷர்களைப் பிரியப்படுத்தினால், நாங்கள் தேவனுடைய ஊழியர்களாக இருக்க முடியாது. போதகர்களாகிய நாங்கள், ஜனங்களை மகிழ்விப்பதற்காக இந்த இடத்திற்கு வருவதில்லை. எனவே, நீங்கள் திருச்சபைக்கு மகிழ்விக்கப்பட வந்திருந்தால், நீங்கள் தவறான இடத்திற்கு வந்திருக்கிறீர்கள்; ஏனென்றால், நாங்கள் மனுஷர்களை மட்டுமே பிரியப்படுத்தினால், நாங்கள் தேவனுடைய ஊழியர்களாக இருக்க முடியாது. வெறுமனே உங்களை மகிழ்ச்சியடையச் செய்வது எங்கள் குறிக்கோள் அல்ல, உங்களை உருவாக்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆனால் சில செயல்பாடுகளில், நீங்கள் மகிழ்ச்சியாக உணரலாம், இது கூடுதலாகச் செய்யப்படும் ஒரு காரியமே தவிர வேறல்ல! மேலும், நீங்கள் போதகரையும்

சபையையும் நேசிக்க ஆரம்பிக்கலாம்; ஆனால் அவை எங்களது குறிக்கோள்கள் அல்ல. உங்களை கிறிஸ்துவில் பூரணராக்குவதே எங்கள் நோக்கமாகும். நாங்கள் மனுஷனை மகிழ்விப்பவர்களாக மாறும் நாளில், தேவனுடைய ஊழியர்களாக இருப்பதிலிருந்து விலகிவிடுகிறோம்.

# 2

# உங்கள் போதகருக்கு உதவுவது எப்படி

பின்வரும் அறிவுரைகள் போதகருக்கு மட்டுமல்ல, உங்களுக்கு ஊழியம் செய்யும் அனைத்து திருச்சபை ஊழியர்களுக்கும் பொருந்தும்.

## உங்கள் போதகரின் சாட்சியைப் பாதுகாக்க உதவுங்கள்

**1 தீமோத்தேயு 3:2**

**ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியமுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்க வேண்டும்.**

**தீத்து 1:6,7**

**6 குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும் துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம்.**
**7 ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக் கேற்றவிதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானபிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்,**

1 தீமோத்தேயு 3:2-ன்படி, ஒரு ஆவிக்குரிய கண்காணி "குற்றமில்லாதவனாக இருக்க வேண்டும்." மேலும் தேவனுடையமனுஷனாகஅல்லதுமனுஷியாகஇருப்பதற்குத் தேவையான மற்ற எல்லா கோரிக்கைகளையும் வேதாகமம் தொடர்ந்து கூறுகிறது. ஒரு ஆவிக்குரிய தலைவரிடம்

தேவன் கோரும் முதல் கோரிக்கை என்னவென்றால், அவர் குற்றமற்றவராக இருக்க வேண்டும் என்பதுதான், அதாவது ஒருவரும் அவரைக் கை நீட்டிக் குற்றம் சாட்ட முடியாத ஒரு நபராக இருக்க வேண்டும். தலைவரின் சாட்சி சரியானதாக இருக்க வேண்டும்.

**2 கொரிந்தியர் 6:3, 4**

**3 இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்.**

**4 மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும்,**

*"எதிலும் குற்றஞ்சாட்டப்படாமல் இருத்தல்"* என்பதுதான் போதகர்களையும் திருச்சபை ஊழியர்களையும் தேவன் அழைத்த தரநிலையாகும். நாம் குற்றமற்ற வாழ்க்கை வாழ வேண்டும்—நம் ஊழியத்தைக் குறை சொல்ல முடியாதபடி, எந்தக் காரியத்திலும் குற்றச்சாட்டு இல்லாமல் ஊழியத்தை நடத்த வேண்டும். இதைச் செய்ய எங்களுக்கு உங்களது உதவி தேவைப்படுகிறது.

**நீதிமொழிகள் 22:1**

**திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது; பொன் வெள்ளியைப்பார்க்கிலும் தயையே நலம்.**

போதகரின் சாட்சியைப் பாதுகாக்க நீங்கள் உதவக்கூடிய சில நிகழ்வுகளைப் பார்ப்போம்.

- நீங்கள் ஒரு பெண்ணாக இருந்தால், உங்கள் போதகரை அவரது அலுவலகத்தில் எல்லோரும் இருக்கும்போது சந்திக்கவும். உங்கள் போதகரை விநோதமான இடங்களிலும், விநோதமான நேரங்களிலும் சந்திக்கச் சொல்லிக் கேட்காதீர்கள். உங்களுக்கு உண்மையிலேயே அவசரமான தேவை

இருக்கலாம் ஆனால் உங்கள் போதகரை விநோதமான இடங்களில் சந்திக்கும்படிக் கேட்டு அவருக்கு சிரமத்தை ஏற்படுத்தாதீர்கள். பார்ப்பவருக்கு இது எப்படித் தோன்றும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்— ஒருவேளை போதகர் ஒரு பொதுக் கூட்டம் நடக்கும் இடத்தில் ஒரு குவளை காஃபியைக் குடித்துக்கொண்டு ஒரு பெண்ணுக்கு ஆலோசனை வழங்கலாம். ஆனால், போதகரைத் தெரிந்தவர்கள் இதைப் பார்க்க நேர்ந்தால், திருமணமாகி குழந்தைகளைப் பெற்ற ஒரு திருச்சபையின் போதகர் வேறு ஒரு பெண்ணுடன் தனியாக என்ன செய்கிறார் என்று அதிர்ச்சியடையலாம். ஆலோசனை வழங்கும் சமயம் நீண்ட நேரத்திற்கு நீடிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது போதகரின் சாட்சி மேலும் ஆபத்தில் இருக்கும். உங்கள் பிரச்சனை எவ்வளவு தீவிரமானது என்பதைப் பொருட்படுத்தாமல், உங்கள் போதகரை அவரது அலுவலகத்தில் சந்திப்பது மிகவும் சரியானது, இல்லையெனில், நீங்கள் ஒரு தேவ மனுஷனின் சாட்சியை அழித்துவிடக் கூடும்.

- நீங்கள் ஒரு பெண்ணாக இருந்தால், திருச்சபையில் ஒரு பெண் ஊழியக்காரி அல்லது தலைவியிடம் உதவி பெறுவது எப்போதும் நலமாக இருக்கும்.
- போதகரைப் பற்றியோ அல்லது திருச்சபையைப் பற்றியோ உங்களுக்கு 100 சதவீதம் உறுதியாகத் தெரியாத ஒரு காரியத்தைச் சொல்லவோ அல்லது உரிமைகோரவோ வேண்டாம். நீங்கள் சொல்லப் போவதைப் பற்றி உங்களுக்கு முழுமையாகத் தெரியவில்லை என்றால், அதைச் சொல்லாதீர்கள். உதாரணமாக, உங்கள் போதகர் அமெரிக்காவில் வாழ்ந்துவிட்டு, இந்தியாவுக்குத் திரும்பி வந்திருந்தால், ஊழியத்திற்கு நிதியளிக்க அங்கிருந்து டாலர்கள் வருவதாகக் கருத வேண்டாம். எந்தவொரு

காரியத்தையும் சொல்லும் முன் உண்மைகளை உறுதி செய்துகொள்ளுங்கள்! எங்கள் திருச்சபையைப் பொறுத்தவரை, பயன்படுத்தப்படும் பணத்தில் 99 சதவிகிதம் இந்தியாவிலிருந்தே பெறுகிறோம்—எங்கள் திருச்சபையின் தசமபாகம், காணிக்கை மற்றும் பங்களிப்புகள் மூலமாகப் பெறுகிறோம். உலகின் வேறு எந்தப் பகுதியிலிருந்தும் எங்களுக்கு ஆதரவாக வேறு எந்தத் திருச்சபைகளும் எங்களுக்கு இல்லை.

- உங்கள் போதகர் அல்லது திருச்சபை செய்வதை தயவுசெய்து மிகைப்படுத்தாதீர்கள். உதாரணமாக, உங்கள் திருச்சபை எட்டு குழந்தைகளை கவனித்துக்கொள்ளும் ஒரு குழந்தைகள் காப்பகத்தை நடத்துகிறது என்றால், "திருச்சபை பல குழந்தைகளுடன் ஒரு பெரிய அனாதை இல்லத்தை நடத்துகிறது" என்று மிகைப்படுத்தாதீர்கள்.

## உங்கள் போதகரின் நேரத்தை சேமிக்க உதவுங்கள்

**எபேசியர் 5:15,16**

**15 ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து,**
**16 நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.**

எபேசியர் 5:16ல், *"காலத்தை மீட்டுக்கொண்டு"*—கிடைக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் சேமித்து, அதை நன்றாகப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்கிறது. நேரம் விலையேறப்பெற்றதாய் இருக்கிறது மற்றும் அது நம் அனைவருக்கும் மிகவும் முக்கியமானது. எங்கள் திருச்சபையில், எங்கள் ஊழியர்கள் ஒவ்வொரு வாரமும் குறைந்தது 40 மணிநேரம் வேலை செய்ய வேண்டும். போதகர் மற்றும் திருச்சபை ஊழியர்களின் நேரத்தை சேமிக்கும்படி நீங்கள் அவர்களுக்கு உதவலாம்.

- வழக்கமான அலுவலக நேரங்களில் போதகரைச் சந்திக்கவும். காலை 8:30 மணி முதல் மாலை 6:30 மணி வரை போதகர் அவரது அலுவலகத்தில் இருந்தால், உங்கள் வேலையை முடித்துவிட்டு அவரைச் சந்திப்பது உங்களுக்கு வசதியாக இருக்கும் என்பதற்காக, அவரை இரவு 7:30 மணி வரை அங்கு காத்திருக்குமாறு கேட்க வேண்டாம். சில சமயங்களில், போதகர்கள் அங்கேயே தங்கியிருந்து ஜனங்களைச் சந்திப்பார்கள், ஆனால் அவர்கள் திரும்பிச் சென்று கவனித்துக்கொள்ள வேண்டிய ஒரு குடும்பம் அவர்களுக்கும் உண்டு என்பதை தயவுசெய்து உணருங்கள். நீங்கள் ஒரு மருத்துவரைச் சந்திக்க வேண்டியிருக்கும்போது, மருத்துவர் கொடுக்கும் சந்திப்பு நேரத்தை நீங்கள் வழக்கமாகக் கடைப்பிடிப்பீர்கள்; மேலும் அவரைச் சந்திக்கஒருநாள்விடுமுறைகூடஎடுத்துக்கொள்வீர்கள். உங்கள் போதகரை அதே எண்ணத்தோடு நடத்துங்கள். உங்களுக்கு ஆவிக்குரிய தேவை இருந்தால், நீங்கள் உங்கள் போதகரைச் சந்திக்கச் செல்ல வேண்டும் என்பது அவசியமாக இருந்தால், உங்களுக்காக போதகரைக் காத்திருக்க வைக்காமல், அந்த நாளில் விடுப்பு எடுத்துக்கொள்ளலாம் அல்லது தேவையான மாற்றங்களைச் செய்யலாம்.

- உங்களுக்கு ஒரு யோசனை இருந்தால், அதை நிறைவேற்ற உங்கள் போதகரிடம் கேட்காதீர்கள்! உங்கள் போதகர் யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வரவேற்கக் கூடியவராக இருக்கலாம், ஆனால் ஒரு ஊழியத்திற்கான யோசனை உங்களுக்கு இருந்தால், உங்கள் போதகர் உங்களது யோசனைகளை நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டாம். பெரும்பாலும், ஜனங்கள் போதகரிடம் யோசனைகளுடன் வருகிறார்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைத் தொடங்க போதகரை தேவன் வழிநடத்துகிறார் என்று வலியுறுத்துகிறார்கள்.

உங்கள் இருதயத்தில் ஒரு வலுவான உந்துதல் இருந்தால், நீங்கள் எதையாவது தொடங்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதில் உறுதியாக இருந்தால், நிச்சயமாக போதகரின் அனுமதியுடன் அதைச்செய்ய நீங்கள் முன் முயற்சி எடுக்க வேண்டும்.

- தயவுசெய்து உங்கள் போதகரைப் புத்தக மதிப்பாய்வு செய்யச் சொல்லாதீர்கள். உங்கள் எல்லோருக்கும் தெரியும், அவருடைய வீட்டில் இன்னும் வாசிக்க வேண்டிய புத்தகங்கள் இருக்கக் கூடும், ஏனென்றால் அவற்றை வாசிக்க அவருக்கு நேரம் இல்லாதிருக்கிறது!
- உதாரணமாக, வரன் பார்த்தல், ரியல் எஸ்டேட் மற்றும் மற்ற நிபுணத்துவ தொழில்களைச் செய்யும்படி உங்கள் போதகரிடம் கேட்க வேண்டாம். நீங்கள் ஒரு இடத்திற்கு இடமாற்றமடைந்தால், உங்களுக்காக ஒரு இடத்தைக் கண்டுபிடிக்க உதவுமாறு உள்ளூர் திருச்சபையின் போதகருக்கு எழுத வேண்டாம். உங்களுக்கு ஊழியம் செய்வதற்காகவே போதகர்கள் இருந்தாலும், அவர்கள் உங்களுக்கு தங்குமிடத்தைத் தேடித் தருவார்கள் என்று எதிர்பார்ப்பது அளவுக்கு அதிகமாக அவர்களைத் தொந்தரவு செய்வதாக இருக்கும். உங்களுக்கான பொருத்தமான எதிர்காலத் துணைவியைக் கண்டறிய உங்கள் போதகருக்கு நெருக்கடி கொடுக்காதீர்கள். இவர் பொருத்தமானவர் என்று யாரேனும் ஒருவரைப் போதகர் நினைத்தால், அவர் அந்த நபரைப் பரிந்துரைக்கலாம், ஆனால் அந்த விஷயத்தில் போதகருக்கு அதிக நெருக்கடி கொடுக்க வேண்டாம்.

## உங்கள் போதகரின் குடும்பத்தைப் பாதுகாக்க உதவுங்கள்

**மத்தேயு 26:31 (சகரியா 13:7லிருந்து மேற்கோள் காட்டப்பட்டது) அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி:**

**மேய்ப்பனை வெட்டுவேன்; மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்.**

- சத்துருவால் மேய்ப்பனை வெட்ட முடியுமானால், அவனால் ஆடுகளை சிதறடிக்கவும் முடியும். ஊழியம் மிகவும் “கவர்ச்சியானது” என்று பெரும்பாலான ஜனங்கள் நினைக்கிறார்கள் - ஒருவேளை போதகர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 50 நிமிடங்கள் பிரசங்கிக்கிறார், மேலும் சபை அவருக்குச் செவிசாய்க்கிறது என்பதால்கூட இருக்கலாம். அவர் பல புத்தகங்களை எழுதலாம், அவரது செய்திகள் அடங்கிய பல ஒலிநாடாக்கள் மற்றும் குறுந்தகடுகளை விற்கலாம். ஊழியத்தில் முன்னணியில் இருந்து உங்களை வழிநடத்தும் தேவனுடைய ஊழியர்கள், தீவிரமான சாத்தானிய தாக்குதல்களுக்கு முக்கிய இலக்குகளாய் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். மேய்ப்பனை வெட்டி அதன் மூலம் ஆடுகளை அழிப்பதே சாத்தானின் நோக்கமாகும். தேவ ஊழியர்களும் போதகர்களும் சாதாரண விசுவாசிகளை விட அதிக தீவிரமான பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். எனவே, உங்கள் போதகருக்கும் உங்களுக்கு ஊழியம் செய்யும் ஊழியர்களுக்கும் நீங்கள் கொடுக்கக்கூடிய மிகப்பெரிய பரிசுகளில் ஒன்று, அவர்களுக்காகவும் அவர்களது குடும்பத்தினருக்காகவும் தவறாமல் ஜெபிப்பதுதான் - அவர்களுக்கு உங்களது ஜெபங்கள் தேவையாய் இருக்கிறது. அவர்களைச் சுற்றிப் பாதுகாப்பு வளையமாக நில்லுங்கள். உங்கள் ஜெபங்களின் மூலம் அவர்களைச் சுற்றி ஒரு கேடயத்தை உருவாக்குங்கள். “அந்த அம்பு என் போதகர் மீது பட வேண்டுமானால், நீ முதலில் என்னைக் கடந்துசெல்ல வேண்டும். நான் இங்கே நிற்கிறேன்!” என்று பிசாசிடம் சொல்லுங்கள். போதகருக்காகவும், அவர்களுடன் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், அவர்களுடைய

குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கும் ஜனங்கள் சபை முழுவதுமாக நிரம்பி இருந்தால், அது ஒரு ஸ்திரமான திருச்சபையாக இருக்கும், ஏனென்றால் அங்கு தலைவர்கள் நன்றாகப் பாதுகாக்கப்படுவார்கள் மற்றும் மேய்ப்பனை வெட்ட பிசாசினால் எதுவும் செய்ய முடியாது.

## பகிர்ந்தளிக்கப்பட்ட தலைமைத்துவத்தை மதித்து பணியாற்றுங்கள்

- உங்கள்போதகரால்எல்லாவற்றையும்செய்யமுடியாது. எனவே, பல்வேறு ஊழியங்களின் பொறுப்புகள் பல தலைவர்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தலைவர்களை மதிப்பதும், அவர்களுக்கு ஒத்துழைப்பதும், அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதும்தான் நீங்கள் செய்ய வேண்டிய சிறந்த செயல் ஆகும். திருச்சபையில் வைக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவ தலைமையை நீங்கள் மதித்து நடந்தால், நீங்கள் போதகருக்கு உதவுவீர்கள். உதாரணமாக, உறுப்பினர் பராமரிப்பு போதகர், குழந்தைகள் திருச்சபை போதகர், குழு போதகர், வாலிப ஊழியப் போதகர், ஆராதனை குழுத் தலைவர் மற்றும் பலர் இருக்கலாம். நீங்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய பிரச்சனை ஏதாவது இருந்தால், அந்த ஊழியப் பிரிவில் உள்ள தலைவரைப் புறக்கணித்துவிட்டு உங்கள் போதகரை நேரடியாக அணுக முயற்சிக்க வேண்டாம். பல்வேறு ஊழியங்களுக்குத் தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்களை கனம்பண்ணுங்கள். பிரச்சனைகளை நேரடியாக அவர்களிடம் கொண்டுவந்து, அதைக் கையாளும்படி அவர்களுக்கு இடமளியுங்கள். ஒரு குறிப்பிட்ட ஊழியத் தலைவருக்கு அனுபவம் இல்லை என்று நினைக்க வேண்டாம். பிரச்சனைகளைத் தீர்க்க அவர்களுக்கு வாய்ப்பளிக்காதபோது, அவர்களுக்குத் தேவையான

அனுபவத்தையே நீங்கள் பறித்துவிடுகிறீர்கள். ஊழியத் தலைவர்கள் மீது போதகர் முழு நம்பிக்கை வைத்திருப்பார் என்பதை நினைவில்கொள்ளுங்கள், அவர் உங்கள் பேச்சைக் கேட்பதற்கு முன்பு அவர்களது பேச்சை நிச்சயம் கேட்பார்.

**1 தீமோத்தேயு 5:17-19**
**17 நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்.**
**18 போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே.**
**19 மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக்கொள்ளக்கூடாது.**

## சபையின் அழைப்பு மற்றும் தரிசனத்துடன் இணைந்து செல்லுங்கள்

**ஆமோஸ் 3:3**
**இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?**

**மாற்கு 3:25**
**ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே.**

- ஒரு உள்ளூர் திருச்சபையின் பங்காளராக இருக்கும் ஒவ்வொருவரும்திருச்சபைக்கு தேவன் கொடுத்திருக்கிற தரிசனம் மற்றும் அழைப்புடன் இணைந்து செல்ல வேண்டும். ஒவ்வொரு உள்ளூர் திருச்சபைக்கும் ஒரு குறிப்பிட்ட அழைப்பு இருக்கும்; மேலும் ஒவ்வொரு உறுப்பினரும் அந்த அழைப்போடு இணைந்து செல்லக் கற்றுக்கொள்ள வேண்டும். உதாரணமாக, திருச்சபையானது ஒரு சிறு குழுவாகக் கூடுவது ஒரு உள்ளூர் திருச்சபையின் தரிசனம் என்றால், சிறு

குழுக்களை விரும்பவில்லை என்றும், சிறு குழுவின் ஒரு பங்காளராக மாற விருப்பமில்லை என்றும் உறுப்பினர்கள் கூறக் கூடாது. இதைத்தான் திருச்சபை கூட்டாகச் செய்கிறது, ஒவ்வொருவரும் இதில் ஈடுபட வேண்டும்.

- தேவன் ஒரு திருச்சபைக்கான தமது திட்டத்தை வெளிப்படுத்துகையில், அவர்கள் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பும் புதிய விஷயங்களை அவர் வெளிப்படுத்துவார். எனவே, போதகருக்கும் ஊழியத் தலைவர்களுக்கும் ஆதரவாக இருங்கள். தேவன் சபையை வழிநடத்துவதற்காக ஏற்படுத்தும் மாற்றங்கள் மற்றும் புதிய விஷயங்களை எதிர்க்காதீர்கள். சரீரத்தோடு சேர்ந்து ஒரே திசையை நோக்கிச் சென்று, தலைவர்களை ஆதரிப்பதன் மூலம் இணைந்து செயல்படுங்கள்.

- நீங்கள் ஒரு திருச்சபைக்குச் செல்லும்போது, அந்தத் திருச்சபை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய முன் யோசனை உங்களுக்கு இருக்கலாம். அந்த யோசனை, திருச்சபையின் தரிசனத்தோடு நீங்கள் இணைந்து செல்வதைத் தடுக்கக் காரணமாக அமையலாம். எனவே, உங்கள் தனிப்பட்ட விருப்பங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, திருச்சபை செல்லும் போக்கில் நீங்களும் செல்ல வேண்டும்.

- தயவுசெய்து திருச்சபையை “இன்று ஒரு திருச்சபை நாளை ஒரு திருச்சபை” என்று மாற்றிக்கொண்டே இருக்க வேண்டாம். உங்களுக்கு ஏதாவது கிடைக்கும்போதும், நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போதும் மட்டும் திருச்சபைக்குச் செல்லும் ஒரு நபராக இருக்காதீர்கள். திருச்சபையிலிருந்து ஏதேனும் வருத்தம் உங்களுக்கு ஏற்பட்டால், அந்த நாளானது, நீங்கள் வேறு இடத்திற்குச் செல்ல முடிவு செய்யும் நாளாக இருக்கக்கூடாது. நீங்கள் எதைப் பெறலாம்

என்று மட்டும் தேடாதீர்கள். நீங்கள் எவ்வளவு அதிகமாகப் பெற்றுக்கொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாகக் கொடுங்கள். *“வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்”* (அப்போஸ்தலர் 20:35) என்று இயேசு கூறினார். நீங்கள் திருச்சபையிலிருந்து - அறிவு மற்றும் புத்திமதியைப் பெற்றுக்கொள்வீர்கள்; நீங்கள் முதிர்ச்சியடைந்து கிறிஸ்துவில் பூரணராக வளர்ச்சியடைந்த நிலைக்குக் கொண்டுவரப்படுவீர்கள்.

## திருச்சபையின் விசுவாசம் மற்றும் போதனையுடன் இணைந்து செல்லுங்கள்

**1 கொரிந்தியர் 1:10**

**சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.**

- “விசுவாச அறிக்கை”யில் அறிக்கையிடப்படும் ஒரு திருச்சபையின் நம்பிக்கை மற்றும் போதனைகள் பொதுவாக திருச்சபை நிறுவப்படுவதற்கு முன்பே எழுதப்பட்டவைகளாய் இருக்கின்றன.
- ஒரு திருச்சபையின் விசுவாச அறிக்கையானது “பேச்சுவார்த்தைக்குரியது அல்ல” மற்றும் அது விவாதத்திற்குக் கொண்டுவரலாகாது.
- நீங்கள் திருச்சபையின் ஒரு பங்காளராக மாறுவதற்குமுன், திருச்சபையின் நம்பிக்கை மற்றும் போதனைகளைப் படித்துப் புரிந்துகொள்ளுங்கள்.
- நீங்கள் உள்ளூர் திருச்சபையின் ஒரு பங்காளராக மாறியதும், விசுவாச அறிக்கையை மாற்ற எந்த முயற்சியும் செய்யாதீர்கள். திருச்சபையின் விசுவாசம் மற்றும் போதனையுடன் நீங்கள் உடன்படவில்லை என்றால், கீழ்க்கண்ட இவற்றில் ஒன்றைச் செய்ய

நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்கள்—திருச்சபையில் இருந்துகொண்டே கற்றுக்கொண்டு வளருங்கள் அல்லது வேறொரு திருச்சபைக்கு நீங்கள் போகலாம். அதே திருச்சபையில் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

- திருச்சபையின் நம்பிக்கை மற்றும் போதனைகளுடன் உடன்படாத தனிப்பட்ட நம்பிக்கைகளைத் தயவுசெய்து தனிப்பட்ட முறையில் வைத்திருங்கள். உதாரணமாக, திருச்சபை பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், அந்நிய பாஷைகளில் ஜெபித்தல், தெய்வீக சுகமளித்தல் மற்றும் பல வேதாகமக் கொள்கைகளுடன் உடன்பட்டால், சபையாரும் உடன்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருச்சபையின் நம்பிக்கை மற்றும் போதனைகளுடன் உடன்படாத உங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகளை ஊக்குவிக்க திருச்சபையைப் பயன்படுத்த வேண்டாம். மேலும், விசுவாச அறிக்கைக்கு முரணான கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் புத்தகங்களை அனுப்புவதன் மூலம் போதகர் மற்றும் பிற ஊழியத் தலைவர்களை உங்கள் யோசனைகளுடன் ஒத்துப்போகச் செய்ய அவர்களை நம்பவைக்க முயற்சிக்க வேண்டாம்.

## ஒரு ஊழியராக மாறுங்கள்

**எபேசியர் 4:11-13**

**11 மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,**

**12 பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,**

**13 அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.**

- எபேசியர் 4:11-13ல், ஒவ்வொரு பரிசுத்தவானும் ஊழியப் பணியைச் செய்வதற்காக ஐந்து வகையான ஊழியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்று சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொரு விசுவாசியும் தேவனுடைய ஊழியராக மாறுவதைப் பார்ப்பதுதான் போதகரின் விருப்பமாகும். நீங்கள் அந்த நிலைக்கு வருவதற்கு சிறிது காலம் ஆகலாம், ஆனால் போதகர்கள் மற்றும் தலைவர்கள் என்ற முறையில் நீங்கள் அந்த நிலைக்கு வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ஓரளவு திறமையோடு நீங்கள் தேவனுக்கு ஊழியம் செய்யத் தொடங்கும் இடத்திற்கு நீங்கள் வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். உங்கள் ஒவ்வொருவருக்கும் வரங்கள், தாலந்துகள் மற்றும் திறன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தேவன் உங்களுக்குள் வைத்திருக்கும் பொக்கிஷங்கள் உள்ளன. அவருடைய ராஜ்யத்திற்காக நீங்கள் பயன்படுத்த விரும்பும் விஷயங்களை அவர் உங்களுக்குள் முதலீடு செய்து வைத்திருக்கிறார். உங்களில் உள்ள திறமை வெளிப்படுவதைக் காண போதகர் நிச்சயம் விரும்புவார். தேவனைச் சேவித்து, தேவனுடைய ஊழியராகுங்கள். நீங்கள் திருச்சபை இருக்கையில்சிறிதுகாலம்அமர்ந்திருப்பதால்எந்தவித பிரச்சனையுமில்லை, ஆனால் இருக்கை சூடாகியதும், தயவுசெய்து அங்கிருந்து மாறிவிடுங்கள்!
- கிறிஸ்துவின் சரீரத்தில் தேவன் உங்களுக்காக ஒரு குறிப்பிட்ட இடத்தை வைத்திருக்கிறார். உங்கள் இடத்தைக் கண்டுபிடித்து, சரீரமாகிய சபையில் உங்களுக்கென்று தேவன் நியமித்த செயல்பாட்டைச் செய்யுங்கள். நீங்கள் ஒரு திருச்சபை உறுப்பினராக மட்டுமல்ல; நீங்கள் தேவனுடைய ஊழியராகவும் இருக்கிறீர்கள். கிறிஸ்துவின் சரீரத்தில் செயல்படத் தொடங்குங்கள்.

**1 கொரிந்தியர் 12:18**
**தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.**

நீங்கள் ஊழியம் செய்யத் தொடங்கும்போது, பின்பற்ற வேண்டிய சில வழிகாட்டுதல்கள் உள்ளன.

- முதலில், வரங்களை உபயோகப்படுத்தும் முன் குணாதிசயத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுங்கள். வரங்கள் வெளியிடப்படுவதற்கு முன் குணத்தைத்தான் போதகர் தேடுவார், ஏனென்றால் நற்குணத்துடன் இணைந்து செயல்படும் வரம்தான் உங்களுக்குத் தேவையாகும். உதாரணமாக, உங்களிடம் ஒரு குறிப்பிட்ட வரம் இருந்தால், அந்த வரத்தைப் பயன்படுத்த போதகர் உங்களுக்கு வாய்ப்பளிப்பார், அதே நேரத்தில் உங்கள் குணத்தையும் கவனிப்பார். குணம் நம்பகமானதாக இருந்தால், உங்கள் வரத்தைப் பயன்படுத்த போதகர் அதிக வாய்ப்பு தருவார். குணநலன்கள் இன்னும் உருவாகவில்லை என்று வைத்துக்கொள்வோம், தனிப்பட்ட பழக்கம், பிரச்சினை, சிக்கல் அல்லது மோசமான மனப்பான்மையைக் கொண்டிருக்கும்வரை அவர் உங்களைக் கொஞ்ச காலத்திற்கு அங்கேயே வைத்திருக்கலாம். முதல் நாளிலேயே போதகர் உங்களுக்கு உடனடியாகப் பதவி உயர்வு அளிக்க வாய்ப்பில்லை! நீங்கள் விரும்பிய நிலையை அடைந்தவுடன், உங்களுக்கு உதவக்கூடிய நற்குணம் உங்களுக்குத் தேவை; இல்லையெனில், உங்கள் செயலினாலேயே நீங்கள் உங்களையும் மற்றவர்களையும் காயப்படுத்திவிடக் கூடும்.
- நம்பிக்கையை ஏற்படுத்துங்கள். உங்கள் போதகரால் நம்பப்படுவதற்கான உரிமையை நீங்கள் பெற வேண்டும்.

- உங்களுக்கு நேராக கவனத்தை ஈர்க்க வேண்டாம். சிலர், தேவனுடைய வீட்டில் ஊழியப் பொறுப்பைப் பெற்றிருக்கையில், மற்ற விசுவாசிகளிடையே "பிரபலமான" மனுஷனாகவோ ஸ்திரீயாகவோ மாறுவதற்கு அதிக முயற்சி எடுக்கிறார்கள். இது கவனத்தை ஈர்ப்பதற்கான அவர்களின் விருப்பத்திலிருந்து உருவாகிறது மற்றும் உண்மையில் அவர்கள் ஜனங்களுக்குக் கர்த்தரைச் சுட்டிக்காட்டுவதை விட்டுவிட்டு, தங்கள் வசமாக அவர்களை ஈர்க்கிறார்கள். எனவே, நீங்கள் ஊழியம் செய்யும்போது, ஜனங்கள் உங்களுக்கு நேராக அல்ல, மாறாக கர்த்தருக்கு நேராக ஈர்க்கப்படுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- உங்கள் ஊழியத்தை முதலில் வெளிப்படுத்துங்கள், பின்னர் உங்கள் அழைப்பை ஜனங்கள் அடையாளம் காணட்டும். தொடர்புடைய ஊழியத்தை வெளிப்படுத்தாமல் உங்கள் அழைப்பை ("நான் ஒரு அப்போஸ்தலன்") அறிவிக்க வேண்டாம். உங்கள் போதகர் ஒரு கூட்ட ஜனங்கள் இல்லாமல் தன்னைப் போதகர் என்று சொல்லிக்கொண்டால் அது எவ்வளவு முட்டாள்தனமானது என்று சிந்தியுங்கள். நீங்கள் செய்யும்படி அழைக்கப்பட்ட பணியைச் செய்யுங்கள், அப்போது உங்கள் அழைப்பும் ஊழியமும் வெளிப்படையாகத் தெரியும். ஜனங்கள் கனிகளைப் பார்க்கட்டும், பிறகு, நீங்கள் எப்படிப்பட்ட மரம் என்ற உணர்வுக்கு வரட்டும்!
- உங்களை நீங்களே முன்னணியில் தள்ளி நிறுத்தாதீர்கள். அழைக்கப்படுவதற்குக் காத்திருங்கள். நாம் ஒரு பெரிய விருந்துக்குச் செல்லும்போது, கடைசி இருக்கையில் உட்கார வேண்டும் என்றும், விருந்தாளி வந்து நம்மை முன்னே வரும்படி அழைக்க வேண்டும் என்றும் இயேசு சொன்னார்.

(லூக்கா 14:7-11). அது அதிக கனத்துக்குரியது. நீங்கள் ஒரு அற்புதமான குரலைப் பெற்றிருக்கிறீர்கள் மற்றும் சில இசைக்கருவிகளை வாசிப்பதில் சிறந்த திறமையைப் பெற்றிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் எவ்வளவு பெரிய இசைக்கலைஞர் என்றும், நீங்கள் சபையில் இசையை வாசிக்க விரும்புகிறீர்கள் என்றும் ஆராதனை நடத்தும் தலைவரிடம் சென்று சொல்ல வேண்டாம். அதற்குப் பதிலாக, உங்கள் திறமைகளைக்கூறி, இசையை வாசிக்கவோ அல்லது ஆராதனையை நடத்தவோ அழைக்கப்படுவதற்குக் காத்திருங்கள். இதற்கிடையில், நீங்கள் இசையை வாசிக்கத் தொடங்கும் முன், நீங்கள் தேர்வு செய்யப்படும்படி, பயிற்சிக்குத் தவறாமல் வர வேண்டும்.

- உங்கள் போதகர் மற்றும் தலைமைத்துவத்துக்குக் கணக்கொப்புவிப்பவர்களாக இருங்கள். அறிவுரைகளைப் பின்பற்றி, விஷயங்களின் போக்குடன் இணைந்திருங்கள். கர்த்தர் திருச்சபையை என்ன செய்யச் சொல்லி வழிநடத்துகிறாரோ, அதற்கு நீங்களே இடையூறு விளைவிக்கும்படிக்கு உங்கள் வைராக்கியத்திற்கு இடமளிக்காதீர்கள்.
- உங்கள் வெகுமதியைப் பெற தேவனை நோக்கிப் பாருங்கள். பலர் தங்களின் வெகுமதியைப் பெறும்படி, போதகரிடமிருந்தும் பிரசங்க மேடையிலிருந்தும் அங்கீகாரத்தையோ அல்லது கைதட்டல் போன்ற விஷயங்களையோ எதிர்பார்க்கிறார்கள். இதெல்லாம் சாத்தியம் என்றாலும், அது நடக்கவில்லை என்றால் ஏமாற்றமடையவோ மனக்கசப்படையவோ வேண்டாம்! நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறீர்கள், உங்கள் வெகுமதி அவரிடமிருந்தே வருகிறது.

## அர்ப்பணிப்பை வெளிப்படுத்துங்கள்

**2 தீமோத்தேயு 2:2**

**அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.**

- திறமையை விட உண்மை முக்கியமானது. போதகர் உண்மையுள்ளவர்களைத் தேடுகிறார். *"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவனாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்"* (நீதிமொழிகள் 28:20).
- நீங்கள் ஒரு பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்போது, அதில் நீங்கள் உண்மையாக இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். உதாரணமாக, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 30 நிமிடங்களுக்கு முன்னதாக வந்து திருச்சபை வளாகத்தை சுத்தம்செய்ய நீங்கள் தீர்மானம்பண்ணியிருந்தால், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அதைச் செய்வதை உறுதிப்படுத்திக்கொள்ளவும். அர்ப்பணிப்போடும் நம்பிக்கையுடனும் இருங்கள். நீங்கள் பணியைச் செய்ய ஊதியம் பெறாவிட்டாலும், வெறும் தன்னார்வத் தொண்டராக இருந்தாலும் கூட, உண்மையுள்ள தன்னார்வலராக இருங்கள்.
- நீங்கள் உதவ முடியாதபடி எதிர்பாராத விஷயங்கள் நேரிடலாம் என்பதைப் போதகர் புரிந்துகொள்வார். உங்களால் அதை நிறைவேற்ற முடியாவிட்டால், முடிந்தவரை சீக்கிரத்தில் தொடர்புகொண்டு அதைத் தெரிவிப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- நீங்கள் செய்வதை சந்தோஷமாக செய்யுங்கள். ஒரு நபர் ஒரு காரியத்தைச் சிரமமின்றி செய்வது மிகவும் எளிதானது அல்ல. ஒரு செயலைச் செய்வது உங்களுக்கு மகிழ்ச்சியாக இல்லை என்றால், அதைச்

செய்யாமல் இருப்பதே நல்லது.

- போதகருக்கு அல்ல, கர்த்தருக்காகச் செய்யுங்கள். உங்கள் போதகரைப் பிரியப்படுத்துவதற்காக நீங்கள் எதையும் செய்யக்கூடாது, அதைக் கர்த்தருக்காகச் செய்கிறீர்கள் என்பதை நினைவில்வைத்துக்கொள்ளுங்கள்.

## சிறப்பாகச் செய்ய நாடுங்கள்

- நீங்கள் எதைச் செய்தாலும் அதை நன்றாகச் செய்யுங்கள். தேவனுக்கு உங்களிடமுள்ள சிறந்ததைக் கொடுங்கள். "பொதுவாக, நான் தன்னார்வத் தொண்டுதான் செய்கிறேன். நான் அதை ஊழியத்திற்காகச் செய்கிறேன்" என்று நாம் அடிக்கடி நினைக்கிறோம். உங்கள் மனப்பான்மை அப்படி இருக்க வேண்டாம். நீங்கள் கர்த்தருக்கென்று ஏதாவது செய்யும்போது, அதை சிறப்பாகச் செய்யுங்கள், மற்றும் தேவன் கொடுத்திருக்கும் திறமைக்கு ஏற்றவாறு செய்யுங்கள். உங்களிடம் உள்ள மிகச் சிறந்த ஒன்றைப் பெறுவதற்கு தேவன் தகுதியானவராய் இருக்கிறார்!

## ஒரு ராஜ்யத்தைக் கட்டியெழுப்பும் நபராக இருங்கள்

- நீங்கள் ஊழியம் செய்யும்போது, இது ஒரு குறிப்பிட்ட உள்ளூர் திருச்சபைக்குச் செய்யும் ஊழியம் அல்ல, மாறாக இது தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்புவது என்பதை நினைவில்வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு உள்ளூர் திருச்சபையின் பங்காளராக இருந்தாலும் கூட, நீங்கள் ராஜாதி ராஜாவுக்காக இதைச் செய்கிறீர்கள் என்பதை நினைவில்கொள்ளுங்கள். அவருடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப நீங்கள் இதைச் செய்கிறீர்கள். நீங்கள் ஊழியம் செய்யும் உள்ளூர் திருச்சபையின் பெயரை மட்டுமே

பார்க்காதீர்கள்; அது ஒரு பெயர் மட்டும்தான்.

- சுயநலத்தையும் சுயத்தை மையப்படுத்துவதையும் ஒதுக்கி வைக்கவும். உங்கள் உள்ளூர் திருச்சபையை பிரபலப்படுத்த எதையும் செய்யாதீர்கள். தேவனுடைய ராஜ்யத்தை மேம்படுத்துவதற்காக நீங்கள் குறிப்பிட்ட இடத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளீர்கள் என்பதை நினைவில்கொள்ளுங்கள். எப்போதும் கிறிஸ்துவை மகிமைப்படுத்துங்கள்.
- ஊழியர்கள், மற்ற ஊழியங்கள் மற்றும் திருச்சபைகள் மத்தியில் ஐக்கியத்தை ஊக்குவியுங்கள். மற்ற சபைகளைச் சேர்ந்த விசுவாசிகளுடன் ஐக்கியங்கொள்ள பயப்பட வேண்டாம். தேவ ராஜ்யத்தைக் கட்டி எழுப்புபவராக இருங்கள். தேவனுடைய ராஜ்யத்திற்கு ஏற்றவாறு சிந்தியுங்கள். கிறிஸ்து நம் மத்தியில் மகிமைப்படும்படியாக, தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப உங்களால் என்ன செய்ய முடியும் என்பதையும், திருச்சபைகள் மற்றும் ஊழியங்கள் மத்தியில் எவ்வாறு பணியாற்றுவது என்பதையும் உங்களுக்கு நீங்களே கேட்டு அறிந்துகொள்ளுங்கள்.

# 3

# உங்கள் போதகர் ஒரு மனுஷன்தான்

சில சமயங்களில், ஜனங்கள் தங்கள் போதகரும் ஒரு மனுஷன்தான் — நம்மைப்போலவே உணர்ச்சிகள் நிறைந்த சாதாரண ஒரு மனுஷன் என்பதை மறந்துவிடுகிறார்கள்! (அவருக்கும் கூட சுவையான உணவை உண்பதில் விருப்பம் இருக்கும்!) இதோ சில நடைமுறை யதார்த்தங்கள்.

- ஒரு மனுஷனை மிகவும் உயர்வாக நினைக்க வேண்டாம். சிலர் தங்கள் போதகரை "கிறிஸ்தவ சூப்பர் ஸ்டார்" போல நடத்துகிறார்கள் மற்றும் தங்கள் போதகரை "சூப்பர் மேன்" என்று நினைக்கிறார்கள். இதோ வெளிப்படையான ஒரு உண்மை. உங்கள் போதகர் ஒரு சூப்பர் ஸ்டாரோ அல்லது சூப்பர் மேனோ அல்ல; தயவுசெய்து அவருக்கு சூப்பர்ஸ்டார் பதவியைக் கொடுத்து "அபிஷேகம்" செய்ய வேண்டாம்! ஒரு மனுஷனை மிகவும் உயர்வாக நினைப்பது தெய்வபக்திக்கு ஏற்றதல்ல, மற்றும் அது ஆரோக்கியமற்றது. தேவனால் நியமிக்கப்பட்ட தலைமைத்துவத்தை கனம்பண்ணவும் மதிக்கவும் வேண்டும்; ஆனால் ஒரு மனுஷனுக்கு ஒருபோதும் தேவையில்லாமல் முக்கியத்துவம் அளிக்க வேண்டாம்.

**1 கொரிந்தியர் 3:21**

**இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே;**

**1 கொரிந்தியர் 4:6**

**சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம்**

**மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், நான் உங்கள் நிமித்தம் என்னையும் அப்பொல்லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து, இவைகளை எழுதினேன்.**

- எல்லாவற்றிற்காகவும் உங்கள் போதகரை மட்டுமே சார்ந்து இருக்காதீர்கள். நீங்கள் ஆவிக்குரிய ரீதியில் வளர வேண்டும் மற்றும் கர்த்தரோடு தனியாக நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். உங்களுக்கு உதவியாக உங்கள் போதகர் இருக்கும்போதே, ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தரோடு கூடிய தனிப்பட்ட உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையை நீங்களே வாசிக்கவும், படிக்கவும், அதைப் புசிக்கவும் கற்றுக்கொள்ளுங்கள். ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் மற்றும் தேவனை நீங்களாகவே விசுவாசியுங்கள். வளருங்கள். “ஆவிக்குரிய குழந்தைகள்” என்ற நிலையிலிருந்து கடந்துசென்று பட்டம் பெற்று, மற்றவர்களை விசுவாசத்தில் வளர்க்க உதவும் ஆவிக்குரிய தந்தையாகவோ அல்லது தாயாகவோ மாறுங்கள்.
- உங்கள் அபிஷேகம் தேவனிடமிருந்து வருகிறது. அபிஷேகம் செய்யப்பட்ட தலைமைத்துவத்திடமிருந்து, அவர்கள் மூலம் ஆவிக்குரிய பகிர்ந்தளித்தல் நடைபெறுகிறது என்பது உண்மை என்றாலும், இறுதியில், உங்கள் அபிஷேகம் தேவனிடமிருந்து வருகிறது என்பதை நீங்கள் நினைவில்கொள்ளுங்கள். அபிஷேகம் செய்பவர் தேவன் ஒருவரே ஆவார். உங்கள் போதகருடைய அபிஷேகத்தின் சரியான பிரதி உங்களிடம் இருப்பதில்லை. உங்கள் சொந்த வரம் மற்றும் அபிஷேகத்தை நீங்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டு, அதை வளர்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் போதகர் மீதும் உங்கள் உள்ளூர் திருச்சபையின் மீதும் இருக்கும் அபிஷேகமும் மேலங்கியும் நீங்கள் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டதை மேம்படுத்த

உங்களுக்கு உதவக் கூடும். ஆனால் இறுதியில், உங்கள் அபிஷேகமானது தேவனுக்கு முன்பாக நீங்கள் நடந்துகொள்வதைப் பொறுத்ததாகவே இருக்கிறது.

**யோவான் 3:27**

**யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்.**

**2 கொரிந்தியர் 1:21**

**உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம்பண்ணினவர் தேவனே.**

- நியாயந்தீர்க்க அவசரப்பட வேண்டாம். ஏதாவது தவறு செய்தாலோ அல்லது ஏதாவது ஒரு விதத்தில் தங்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்யத் தவறினாலோ, தேவையற்ற அல்லது அதிகப்படியான எதிர்பார்ப்புகள் காரணமாக, ஜனங்கள் தங்கள் போதகர்களை மிகவும் விமர்சிக்கிறவர்களாக மாறவும் அவர்களுக்குப் புற முதுகு காட்டவும் கூடும். ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், மிகவும் ஆதரவானவர்களும் மிகவும் புரிந்துகொள்ளக் கூடியவர்களுமான ஜனங்கள் இருப்பதால் நான் பாக்கியவான். இருப்பினும், ஒரு நினைவூட்டலாக, நான் இதை இங்கே கூறுகிறேன்—உங்கள் போதகரை அவசரப்பட்டு நியாயந்தீர்க்க வேண்டாம். உங்களைப் போலவே உங்கள் போதகரும் இன்னும் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார், இன்னும் கட்டுமானத்தில் உள்ள கட்டிடமாகவே இருக்கிறார். எனவே, குழப்பங்கள் ஏற்படுவதை மன்னித்துவிடுங்கள், மற்றும் எல்லாவற்றிலேயும் பொறுமையாக இருங்கள்.

**1 கொரிந்தியர் 4:3-5**

**3 ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப்பெறுவது எனக்கு**

**மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச்சொல்லுகிறதில்லை.**

**4 என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே.**

**5 ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்.**

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள்

நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations** ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses—Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work—Its Original Design

புதியபுத்தகங்கள்தொடர்ந்துவெளியிடப்படுகின்றன.PDF,ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் ஆலோசனை மையம்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் ஆலோசனை மையமானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

**இளம் பிராய நடத்தை**

**பிறரோடு இணைக்கக் குறைபாடு**

**உறவுமுறை சவால்கள்**

**கல்வியில் பின்தங்கிய நிலை**

**தொழில் தொடர்பான பிரச்சினைகள்**

**குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்**

**பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்**

**நடத்தையில் சீர்கேடு**

**ஆளுமை குறைபாடு**

**உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்**

**மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி**

**மது / போதைப்பொருளுக்கு அடிமை**

**ஆவிக்குரிய போராட்டங்கள்**

**வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை**

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**வலைதளம்: chrysalislife.org**
**தொலைபேசி:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998
**மின்னஞ்சல்: counselor@chrysalislife.org**

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் ‘கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்’ ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்”க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு, கர்நாடகா 560043

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* ***apcwo.org/give*** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.


**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

## DOWNLOAD THE FREE APP!

*Search for*
"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play



*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

குழந்தைகளை வளர்க்கும்போது, நாம் பெரும்பாலும் அவர்கள் மீது அன்பைப் பொழிந்தாலும், சில சமயங்களில் அவர்களிடம் கடினமாய் நடந்துகொள்வது பெற்றோர்களாகிய நமக்குத் தெரியும்! இது நம் குழந்தைகளை நாம் வெறுக்கிறோம் என்பதால் அல்ல, மாறாக அவர்களை சத்துவமுள்ளவர்களாக வளர்க்க வேண்டும் என்று நாம் விரும்புவதால்தான் அப்படிச் செய்கிறோம். அவ்வாறே, அதுபோல, திருச்சபையில் சத்துவமுள்ளவர்களை வளர்க்க விரும்பும்போது, அவர்கள் தேவனுடைய வீட்டில் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, இந்தக் காரியத்தைத் குறித்த போதனைகள் அதிகம் இல்லை, மேலும் எல்லோரும் தாங்கள் சரி என்று நினைப்பதைச் செய்ய முனைகிறார்கள். திருச்சபையில் உள்ளவர்கள் தங்கள் மனதில் தோன்றினதைச் செய்து, திருச்சபையை வெவ்வேறு திசைகளில் இழுக்கிறார்கள், இதனால், திருச்சபை ஒன்றுமில்லாமல் போகிறது! ஒவ்வொருவரும் தனக்குச் சரியென்று நினைப்பதைச் செய்தால், நம் மத்தியில் கூச்சல்களும் குழப்பமும் மட்டுமே நிறைந்திருக்கும். ஆனால் தேவன் குழப்பத்திற்கான ஆக்கியோன் அல்ல.

திருச்சபையில் உள்ள ஜனங்களை சத்துவமுள்ளவர்களாய் உருவாக்குவதன் மூலம் அதை பலமான திருச்சபையாக உருவாக்க வேண்டும் என்ற ஆசையில், "உங்கள் போதகருக்கு உதவுவது எப்படி" என்ற இந்தச் செய்தியை நான் உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். அப்படிச் செய்வதால் என் இருதயத்தின் உந்துதலை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.


**All Peoples Church & World Outreach**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org